பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 18 | வியாழக்கிழமை | 03.08.2023 | கதிர் 265

# நீர்தேக்கங்களில் மட்டம் குறைவு மின் உற்பத்தி வீழ்ச்சியுறும் அபாயம்

## மின்சார சபை எச்சரிக்கை

மின்சார உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 36 சதவீதம் குறைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களில் நீடிக்கும் வறட்சி காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்து வருகின்றன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன அறிவித்துள்ளன.

இந்த நிலையில் மின்சார சபை தனது நீர் மின் உற்பத்தி தொடர்பாக அறிவிப்பை விடுத்துள்ளது.

“நாட்டில் பயன்படுத்தப்படும் மொத்த மின்சாரத்தில் 16 சதவீதம் நீரை மையப்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. தற்போது நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைவதால் மின் உற்பத்தி பின்னடைவுகளை சந்திக்கும் நிலை ஏற்படலாம்” இருப்பினும் 62.2 சதவீதமான மின்சார உற்பத்தியானது எரிபொருள் உள்ளிட்ட இதர சக்தி மூலங்கள் மூலம் உருவாக்கப்படுகின்றது’’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீர் மின் உற்பத்தி குறைவடைந்தாலும் அனல் மின் உற்பத்தி மூலமாக மின் வெட்டு இன்றி மின்சாரத்தை வழங்க முடியும் என்று மின்சார சபை மறைமுகமாகத் தெரிவித்துள்ளது.

## இது ரகசியம் அல்ல!

இன்னும் கொஞ்ச நாள்களில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கோட்டாபயவுக்கு ஒரு கொரோனா என்றால் ரணிலுக்கு ஒரு வறட்சி என்கிற நிலை ஏற்பட்டு வருகின்றது. ரணில் இதனை எப்படிக் கையாள்கிறார் என்பதிலிருந்தே அவர் ஓட ஓட விரட்டப்படுவாரா அல்லது நங்கூரம்போட்டு அதிகாரக் கதிரையில் தொடர்ந்தும் ஒட்டியிருப்பாரா என்பது தெரியவரும்.

தெற்கில் விவசாயிகள் மீண்டும் போராடத் தொடங்கியிருப்பதே இதற்குக் காரணம். சப்ரகமுவ மாகாணத்தில் சமநல வாவியின் கீழ் ஆயிரக்கணக்கான ஹெக்டெயர் நெல் வயல்கள் சிறுபோகத்தில் செய்கை பண்ணப்படுகிறது. வறட்சியால் நீர்த் தேக்கங்களில் தண்ணீர் மட்டம் குறைந்து வரும் நிலையில் இந்த விவசாயிகளின் பயிருக்கு தண்ணீரைத் திறந்துவிட ஆளும் தரப்பு மறுத்து வருகின்றது. நீர்த் தேக்கத்தில் உள்ள தண்ணீர் நீர் மின் உற்பத்திக்குத் தேவை என்பதால் அதனை விவசாயத்திற்குத் திறப்பதில்லை என்று ரணில் ஆட்சி தீர்மானித்துள்ளது. ☞2

## தடை நீக்கம்

ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார மீது விதித்த தடையை நீக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது.

ஹரின் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு கட்சியின் செயற்குழுவினால் தடை விதிக்கப்பட்டது.

இருவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ☞2

# உரப் பிரச்சினையால் கோட்டாபய பதவி விலக நேரிட்டதை மறக்காதீர்

## முன்னாள் அமைச்சர் ஆளும் தரப்புக்கு எச்சரிக்கை

விவசாயிகளின் கோரிக்கையை உடன் நிறைவேற்ற வேண்டுமென முன்னாள் அமைச்சர் எஸ் எம் சந்திரசேன வலியுறுத்தினார்

விவசாயிகளின் உர விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய கை வைத்தமையாலேயே பதவி விலக நேரிட்டது என்பதை மறந்துவிடக்கூடாது எனவும் அவர் சுட்டி காட்டினார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜனபெரமுனவின் தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச விவசாயிகளுக்கு உரம் வழங்குவதை மாற்றி அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்தார். இதன் காரணமாக விவசாயிகள் நெருக்கடியை சந்தித்தார்கள். அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டார்கள். அதன் பின்னரையே நெருக்கடி நிலைமைகள் அதிகரித்து அவர் பதவி விலகும் நிலை ஏற்பட்டது

இந்த விடயத்தினை ஒருபோதும் மறந்து போகக் கூடாது. இப்போது உடவளவ நீர் ☞2

# வறட்சியா மின்சாரமா என்றால் மின் உற்பத்திதான் என தீர்மானம்

## அமைச்சரவை முடிவு அதுவே என்கிறார் அமைச்சர் ரொஷான்

வறட்சி கடுமையாகப் பாதித்துள்ள பகுதிகளில் விவசாயத்திற்குத் தண்ணீரா மின்உற்பத்திக்குத்தண்ணீரா என்று வருகின்றபோது மின்வெட்டுக்குத் திரும்பிச் செல்லாத வகையிலான வேலைத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பது என்றே அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இவ்வாறு விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வறட்சி நிலவுகின்ற பிரதேசங்களில் விவசாயத்திற்குத் தேவையான நீரை நீர்த் ☞2

# முதல் நாணயக் கொள்கை அறிக்கையை வெளியிட்டது இலங்கை மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி தனது முதலாவது நாணயக் கொள்கை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இணையத் தளம் மூலமாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க இதனை செவ்வாய்க்கிழமை வெளியிட்டு வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் நடுத்தர கால கணிப்புகளை மேம்படுத்தும் முக்கியபணவியல்கொள்கை மறு ஆய்வு சுழற்சிகளுக்கு ஏற்ப இந்த நாணக்கொள்கை அறிக்கை வெளியிடும். அவ்வாறு செய்வதன் மூலம், மத்திய ☞2

# 5,450 பட்டதாரிகளுக்கு உடன் ஆசிரிய நியமனம்

## மாகாண மட்டத்தில் வழங்க அனுமதி

ஆசிரியர் சேவை சட்டப் பிரமாணங்களுக்கு ஏற்ப, 5,450 பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் போன்ற முக்கிய பாடங்களுக்காக ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

விரைவில் மாகாண ரீதியில் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ☞2

# சிப்பாய் சாவு

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிறேட் வெஸ்டன் கல்கந்தை மலை உச்சியில் கண்டு பிடிக்கப்பட்ட பெண்ணின் சடலத்தை மலை உச்சியில் இருந்து மீட்டு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு வரச் சென்ற நபர் ஒருவர் மலை உச்சிக்கு ஏறும்போது மாரடைப்பில் உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் தற்போது லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(02)

# நெல்லுக்கு நீரும் உரிய விலையும் வழங்கவேண்டும் ஆளும் தரப்பு

## சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

சப்ரகமுவ மாகாண விவசாயிகளுக்கு நீரையும் வடக்கு மாகாண விவசாயிகளுக்கு உரிய விலையையும் வழங்கி விவசாயத்தையும் மக்களையும் வாழவிடுங்கள் என்று ஆளும் தரப்பிடம் வலியுறுத்தியுள்ளார் ஈபிஆர் எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உடவலநீர்த்தேக்கத்தின் நீரைத் திறந்துவிடுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையால் தென்பகுதி விவசாயிகளும், தமது உற்பத்திக்கு உரிய விலை கிடைக்காததால் வடபகுதி விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர். நாட்டின் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து, உணவுப்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையான விவசாயத்தை வாழவிடுங்கள்.

சப்ரகமுவ ☞2

# மருத்துவ சட்டத்தை விரைந்து புதிதாக உருவாக்கப் பணிப்பு

தற்போதைய மருத்துவ கட்டளை சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கையில் புதிய மருத்துவ சட்டமொன்றை உருவாக்குவதற்கு ஆளும் தரப்பு திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, புதிய மருத்துவ சட்டமூலத்தை 6 மாதங்களுக்குள் உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, தரமான சுகாதார சேவையை வழங்குதல் மற்றும் நாட்டு மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் 3 மாதங்களுக்குத் தேவையான அவசர மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 30 பில்லியன் ரூபாவை மேலதிகமாக மருத்துப் ☞2

# வடக்கில் தெங்கு முக்கோணம் யாழ்.-மன்னார்-முல்லைத்தீவில்

## அமைச்சர் ரமேஷ் பத்திரன அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய செப்டெம்பர் 02 ஆம் திகதி உலக தெங்கு தினத்தை முன்னிட்டு நாட்டின் இரண்டாவது தெங்கு முக்கோணத்தை யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களை மையப்படுத்தி வடக்கில் ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தோட்டைக் கைத்தொழில் மற்றும் தொழிற்சாலைகள் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

இவ்வருடத்தில் 290 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை ஏற்றுமதி செய்யத்திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறப்பர் சார்ந்த ஏற்றுமதி மூலம் 900 மில்லியன் டொலர்களும் தேங்காய் சார்ந்த ஏற்றுமதி மூலம் 700 மில்லியன் டொலர்களும் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கையில் கறுவா பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கும் கோப்பி பயிர்ச்செய்கையை மீள விரிவுபடுத்துவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

கடந்த வருடத்தில் உர தட்டுப்பாடு காரணமாக பெருந்தோட்டத்துறை சரிவை சந்தித்திருந்தது. ☞2

# முக்கிய 2 நிறுவனங்கள் ரணில் அமைச்சின் கீழ்

## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் இரண்டு முக்கிய நிறுவனங்களை கொண்டு வரும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்டுள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் இருந்த சகஸ்யா முதலீட்டு நிறுவனம் (Sahasya Investment Limited) மற்றும் தேசிய இயந்திர கல்வி நிறுவகம் (National Machinery Institute) ஆகிய இரண்டு நிறுவனங்களையும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் கொண்டுவரும் வகையிலேயே இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

## இனி இது .....

தண்ணீர் கிடைக்காத பட்சத்தில் பல ஆயிரக் கணக்கான ஹெக்டெயரில் பயிரிடப்பட்டுள்ளநெற்பயிர்கள் அழிந்துநாசமாகிவிடும்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் விவசாயிகள் ஏற்கனவே வீதிக்கு இறங்கிவிட்டார்கள். ஆனாலும், இதுஒருமாகாண விவசாயிகளின் பிரச்சி னையாகமட்டுமேஇருக்கும் நிலையில், தண்ணீரைத் திறந்துவிட்டு மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடு முழுவதும் உள்ள மக்களை அது பாதிக்கும் என்பதால் விவசாயம் கெட்டாலும் பறவாயில்லை மின்வெட்டைக் கொண்டு வருவதில்லை என்பதில் ரணில் ஆட்சி தீவிரமாக உள்ளது.

மின்வெட்டுநடைமுறைப் படுத்தப்பட்டால் நாடுமு முவதும் தனக்கெதிரான உணர்வலை பரவிப் பாயும் என்கிற அச்சம் கார ணமாகவே சப்ரகமுக மாகாண விவசாயிகளைப் பலிகொடுக்க ரணில் தயா ராகிவிட்டார். இருந்தாலும் விவசாயமும் உணவும் மக் களின்உணர்வுபூர்வவிடயம் என்பதால் அது நாட்டில் ஏற்படுத்தப்போகும் - பரவ விடப்போகும் -உணர்வுகள் இந்த ஆட்சிக்கு எதிரான அடுத்த கிளர்ச்சிக்கு கால்கோளிடும் என்பதை நிராகரிக்க முடியாது.

தங்கள் கண்முன்னே பயிர்கள் கருகி அழிவது விவசாயிகளுக்குத் தமது குழந்தை இறப்பதற்குச் சமம். எனவே அவர்களின் எதிர்வினைகள் மற்றை யவர்களையும்உடனடியாக உணர்வுபூர்வமாகப் பற் றிக்கொள்ளும். எனவே ஆட்சியாளர்கள் இதனை எப்படிக் கையாளப்போகி றார்கள் என்பதைப் பொறுத் தே ரணில் ஆட்சியின் எதிர்காலமும் அமையப் போகிறது. தனது குள்ளநரித் தனத்தால் இந்த விவகா ரத்தையும் ரணில் வெற்றி கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தடை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதையடுத்து, அந்தத் தடையை நீக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மா னித்துள்ளது.

## உரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேக்கத்தில் நீர்மட்டம் குறைந்து உள்ளமையால் விவசாயிகள் நெருக்கடியை சந்தித்துள்ளனர். இதன் காரணமாக அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடுகிறார்கள் அவர்களின் நியாயமான கோரிக்கை மதிக்கப்பட வேண்டும்விவசாயநடவடிக் கைகளுக்கு தேவையான நீரை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட வேண்டும் - என்றார்.

## வறட்சியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேக்கங்களில் இருந்து விடுவித்தல் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் தோன் றியுள்ளது. குறிப்பிட்ட சில நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை விடுவிக்கும்போது அது மின் உற்பத்தியைப் பாதிக்கும்.

அவ்வாறு நீரை விடு விப்பதன் மூலம் மின் உற் பத்தி வீழ்ச்சி அடைந்தால் நாட்டில் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலை தோன்றும் சாத்தியம் இருப்பதால் விவசாயம் மற்றும் மின் உற்பத்தி என்ற இரண்டு விடயங்களும் பாதிக்காத வகையில் இந்த சிக்கலைத் தீர்க்க முயற்சி எடுத்து வரப்படுகிறது.

இது குறித்து அண் மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தில் விரிவாக ஆராயப்பட் டதுடன், அங்கு மின்சாரத் தை துண்டிக்காத வேலைத் திட்டத்திற்கு நாம் செல்ல வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது

கடந்த காலங்களில் நில விய பொருளாதார நெருக்கடி காரணமாக கால்வாய்களைச் சுத்தம் செய்யக் கூட நிதி ஒதுக்க முடியாத நிலை காணப்பட்டது. உலக வங்கியுடன் கலந்துரையாடி, நிதி அமைச்சின் ஆதரவுடன் இரண்டு திட்டங்களுக்கு 10,000 மில்லியன் ரூபா ஒதுக்க முடிந்துள்ளது, அதில் கால்வாய்கள், நீர்ப் பாசனக் கட்டமைப்பு மற் றும் நீர்த்தேக்கங்களை புனரமைப்பதற்கு 3,000 மில்லியன் ரூபா ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடன் அடிப்படை யில் இந்த நிதி பெற்றுக்கொள் ளப்படுவதால் நீண்ட கால பயன்பாட்டைக்கொண்ட பணிகளுக்கு இதனை செலவிட அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகிறது.

மகாவலி வலயத்தில் வசிக்கும் ஒரு சிலருக்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாக காணி உறுதிகள் இருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக காணி உறுதிகளை வழங்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி "காணி உறுதி வீட்டுக்கே" என்ற தொனிப் பொருளில், மகாவலி காணிகளில் வசிப்பவர்க ளுக்கானகாணிஉறுதிகளை அவர்களின் வீட்டுக்கே சென்று வழங்கும் வேலைத் திட்டமொன்றுநடைமுறைப்ப டுத்தப்படுகிறது. அதன் மூலம் இதுவரை 20,000 காணி உறுதிகள் வழங்கப் பட்டுள்ளதோடு மேலும் 15,000 உறுதிகளை வழங்க அவசியமான பணிகள் முன் னெடுக்கப்பட்டு வரப்படு கின்றன - என்றார்.

## 5,450 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து கல்வியல் கல்லூரிகளையும்இணைத்து பல்கலைக்கழகமாக மாற் றும் யோசனையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2024ஆம் ஆண்டு சீருடைகள், அப் பியாசப்புத்தகங்களை வழங் குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன என்றுள்ளது.

## மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களுக்காக ஒதுக்கு வதற்கு அமைச்சரவையின் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரத் தட்டுப்பாட்டினை போன்றே சீரற்ற காலநி லையும் பெருந்தோட்டகைத் தொழிலுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 50 கிலோ யூரியாவின் விலை முப்பதாயிரம் ரூபாவாக அதிகரித்திருந்த நிலையில் தற்போது அதன் விலையை 9000வரையில்மட்டுப்படுத்த எமதுஆட்சிதீர்மானித்துள்ளது. இந்த நிலைமையின் இந்த வருட இறுதியில் முன்னூறு மில்லியன்கிலோகிராம்தேயி லையை ஏற்றுமதி செய்ய முடியும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இந்த நிலையில், இவ்வருட இறுதிக்குள் 290 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியும் என மதிப் பிடப்பட்டுள்ளது. மேலும் ஒன்லைன் முறையில் உலகசந்தையில் தேயிலை விற்பனை செய்யும் முறை யும் தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

ஈரானிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 500 மில்லியன் டொலர் பெறு மதியான எரிபொருளுக்கு பதிலீடாக தேயிலை ஏற்று மதி செய்யவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. அதனால் எமக்கு கிடைக்காமல் போன ஈரான் தேயிலை சந்தை வாய்ப்பை மீண்டும் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதே எமது எதிர்பார் ப்பாகும். இலங்கையின் தேயிலை கொள்வனவாளர் களான பாகிஸ்தான், ரஷ்யா, உக்ரேன், ஈரான், ஈராக் உள் ளிட்ட நாடுகளில் நிலவும் பிரச்சினை காரணமாக அவர்களின் தேயிலை கொள்முதல் திறன் குறைவ டைந்து வருகின்றது. இலங்கை தேயிலைக்கான விலை உலக சந்தையில் நிலையாக காணப்பட்டாலும் தேயிலை கொள்வனவு செய்யும் நாடுகளின் கொள் முதல்திறன் குறைவடைந்து வருகின்றமை சிக்கலாக உள்ளது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் 10 பேர்ச்சஸ் காணியை அவர் களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய எதிர்வரும் காலங்களில் அவர்களுக்கான காணி உரிமை பெற்றுக்கொ டுக்கப்படும். அதன் பின்னர் அவர்களுக்கு வீட்டுக் கடன்களை பெற்றுக்கொ டுக்க ஏற்பாடுகள் செய்யப் படவுள்ளது.

கடந்த வருடத்தில் இறப் பர் ஏற்றுமதியிலும் ஒரு பில்லியனை இலாபமாகஈட்ட முடிந்துள்ளது. கொரோனா தொற்று பரவிய காலத்தில் கைஉறைகள்உற்பத்திக்காக இறப்பர்கொள்வனவுசெய்யப் பட்டதனால் அதிகளவான ஏற்றுமதி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால், தற்போதைய நெருக்கடிகள் காரணமாக இறப்பருக்கான கேள்வி குறைவடைந்துள்ளது. அதனால்இவ்வருடத்தில்900 மில்லியன் டொலர் வருமா னம் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் தேங்காய் ஏற்றுமதி வருமானம் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளது. எமது நாட் டின் தெங்கு உற்பத்தியில் காணப்படும் பல்வகைத் தன்மை காரணமாக அதற்கான கேள்வி மேலும் அதிகரித்துள்ளது. தேங்காய் பால், தேங்காய் சிரட்டை, கார்பன் உற்பத்திகள் ஆகிய வற்றிற்கான கேள்வி அதிக ரித்து வருகின்றது. இவ்வரு டத்தில் தென்னை சார் உற்பத்திகள் ஊடாக 700 மில்லியன் டொலர் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த தசாப்தத்திற்குள், தென்னை சார் உற்பத் திகளிலிருந்து 2 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமா னத்தைப் பெறத் திட்டமிடப் பட்டுள்ளது. அதன்படி, இலங்கையில் இரண்டா வது தெங்கு முக்கோ ணத்தை உருவாக்க எதிர் பார்க்கப்படுகின்றது. வடமா காணத்தில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த இரண்டாவது தெங்கு முக்கோணத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. தெங்கு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு உள் நாட்டு நுகர்வுக்கு பயன்படுத் தப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதிக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையை மாற்றி ஏற் றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கறுவாவிளைச்சளுக்குத் தேவையான புவிசார் குறியீ ட்டுச் (GI) சான்றிதழை நாம் தற்போது பெற்றுள்ளோம். உலகிலேயே சிறந்த கறுவா இலங்கை மற்றும் மடகஸ்கரில் மாத்திரமே இருப்பதால், சிறந்த ஏற்றுமதி வருமானத்தைப் பெற முடி யும். எனவே கறுவாச் செய் கையை ஊக்குவிப்பதற்காக அமைச்சு என்ற வகையில் முறையான வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத் தப்படுகின்றது.

உலகில் மிகவும் பிரபல மாகி வரும் கோப்பியை, பயிர்ச்செய்கையாக மீண் டும் இலங்கையில் விரிவாக் குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேயி லைக்கு முன்னர் இலங் கையில் கோப்பி பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சில பூஞ்சை நோய் காரணமாக, விவசாயிகள் கோப்பி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் இருந்து விலக வேண்டி ஏற்பட்டது. ஆனால் உலக சந்தையில் கோப்பிக்கு அதிக கேள்வி உள்ளதால், இலங்கையில் கோப்பி விளைச்சலை விரிவுபடுத்த திட்டமிடப் பட்டுள்ளது. அதன்படி, 1000 ஏக்கரில் கோப்பி பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றார்.

## முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கி தனது அனைத்து பங்குதாரர்களுக்கும் தரவு உந்துதல் மற்றும் முன்னோக்கு தகவல் களை சரியான நேரத்தில் வழங்கும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

இது பொது மக்களின் பணவீக்க எதிர்பார்ப்புகளை நங்கூரமிட உதவும் அதே வேளையில், மத்திய வங்கியின் பணவியல் கொள்கை தயாரிப்பின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தும்.

ஆன்லைன் வெளி யீடான நிதிக் கொள்கை அறிக்கை, மத்திய வங்கி யின் அதிகாரப்பூர்வ இணை யதளத்தில் https://www.cbsl.gov.lk/publications/economic-and-financial-reports/mone.... என்ற முகவரியில் கிடைக்கும்.

## மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத்திற்கான சிறுபோக விவசாயத்திற்கு உரிய நீரை காலக் கிரமத் தில் வழங்குவதாக உத்தர வாதமளித்த மகாவலி அதிகாரசபை சிறுபோகத்தின் இறுதிகட்டம் நெறுங்கியுள்ள நிலையில் நீரை வழங்க முடியாதநிலையில் உள்ளது. மகாவலி அதிகாரசபையின் இத்தகைய கையாலாகாத் தனத்துக்கு மத்தியிலேயே வடக்கில் காணி அபகரிப் பின் கருவியாக மகா வலி அதிகாரசபை செயற்ப டுகிறது என்பதையும் கவ னிக்கவேண்டும்.

சப்ரகமுவமாகாணத்தில் சமநல வாவியின் கீழ் ஆயிரக்கணக்கான ஹெக் டெயர் நெல் வயல்கள் சிறுபோகத்தில் செய்கை பண்ணப்படுகிறது. இந்த நெற்பயிருக்கான தண்ணீர் கிடைக்காத பட்சத்தில் பல ஆயிரக்கணக்கான ஹெக்டெயரில் பயிரிடப் பட்டுள்ளநெற்பயிர்கள்அழிந்து நாசமாகிவிடும் என்பதுடன் இந்தியாவிடமிருந்தோ, சீனாவிடமிருந்தோ, வியட் நாமிடமிருந்தோ இலங்கை, அரிசியை இறக்குமதிசெய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தமது விவசாயம் அழிவின் விளிம்பில் இருப்பதாகவும் தமக்குத் தேவையான நீரை உடன் விடுவிக்கும்படியும் கோரி அப்பிரதேச மக்கள் கடந்த பத்துநாட்களாக சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இன் னமும் ஆளும் தரப்பினர் எது வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என்பதுடன், உடவ லவ அணையிலிருந்து நீர் திறந்துவிடப்படுமாயின், ஹம்பாந்தோட்டை, காலி உட்படஐந்துமாவட்டங்களுக் கானமின்சாரவிநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் என எரிசக்தி வலுசக்தி அமைச்சர் கூறியுள்ளார். ஆகவே நீரைத் திறந்துவிட முடியாது என மின்சாரஅமைச்சர்கூறுகின்ற அதேசமயம், விவசாயத்திற்கு நீர் கிடைக்காவிட்டால் 1700 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று விவசாய அமைச்சர் கூறுகிறார்.

தென்மாவட்டங் களுக்கான மின்சார விநி யோகம் பாதிக்கப்பட்டால் நூறுகோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று மின்சார அமைச்சர் கூறுகின்றார். ஏற்கனவே பொருளாதார ரீதியில் அதளபாதாளத்தில் இருக்கக்கூடிய ஒரு நாட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய நீரை கொடுக்கமாட்டோம் என்று அடம்பிடிக்கும் அமைச்சரும் நீருக்காகப் போராடும் மக்க ளைத் திரும்பிப் பார்க்காத ஜனாதிபதியும் இந்த நாட்டை பொருளாதார பாதா ளத்தில் இருந்து மீட்கப் போகிறோம் என்று சொல்வது நகைப்புக்குரியது.

தமது மாவட்டங்களைச் சார்ந்த சிங்கள விவசாயி களுக்கே நீரைத் திறந்து விடாத அமைச்சர்கள், வடக்கு மாகாணத்திற்கு மகா வலியைக் கொண்டு வரப்போகிறோம் என்று கூறுவது எந்த வகையில் உண்மையாக இருக்கப் போகிறது? 'எல்' வலயம், 'ஜெ' வலயம், 'ஐ' வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளையே அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

முறையானநீர்ச்சேகரிப்பு வசதிகளின்றி, மழைநீரை சேமித்து வைத்துள்ள குளங்களை நம்பி, மேற் கொள்ளப்பட்டுவரும் வடக்கு மாகாண விவசாயச் செய்கையில் விதை நெல்லு, உரம், கிருமிநாசினிகள், டீசல், உழவுகூலி என அனைத் துமே விலையேறியிருக் கக்கூடிய சூழ்நிலையில், வடக்கு மாகாண விவசாயி கள் தமது நெல்லுக்கு ஒரு நீதியான விலைகேட்டுத் தொடர்ந்தும் குரல்கொடுத்து வருகிறார்கள். ஆனால் அவர்களது கோரிக்கைகள் கண்டுகொள்ளப்படாமல், தனியார் வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடை யும் நோக்குடன் நெற்சந் தைப்படுத்தும் சபையினரும் அறாவிலைக்கு நெல்லை கொள்முதல் செய்ய முயற்சிக்கின்றார்கள்.

பல ஆயிரம், இலட்சங் களைச் செலவு செய்த விவசாயிகள் இரத்தக் கண்ணீர் வடித்து நிற்கிறார் கள். ஆகவே ஆளும் தரப்பு முதலில் இந்த நிலைமையை மாற்றவேண்டும். வடக்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ மேற்கிலோ விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்ற கொள்கை முடிவை ஆளும் தரப்பு எடுக்க வேண் டும். இனவாதக் கண் ணோட்டங்களை விடுத்து, விவசாயிகளை விவசா யிகளாகவே நடத்துங்கள். இந்நாட்டிற்கு உணவ ளிப்பவர்களை வாழவி டுங்கள்.

ஏற்கனவே, அம்பாந் தோட்டையிலிருந்தும் ஏனைய சிங்கள பிரதே சங்களிலிருந்தும் கொண் டுவந்து வடக்கில் குடியேற் றப்பட்டவர்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்காமல் நடுத்தெருவில் விடப்பட் டுள்ளனர். இந்த இலட் சணத்தில் நாடு முழுவதும் சிங்கள பௌத்த மேலா திக்கத்தை நிறுவ வேண் டும் என்ற ஒரே நோக்கில், அப்பாவி சிங்கள மக்களை அழைத்துவந்து வடக்கில் குடியேற்றுவதற்கு இலங்கை கயின் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஒருபுறமும் தொல்பொருள்திணைக்களம் இன்னொருபுறமும் இந்தக் காணிகளைக் கபளீகரம் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றுவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் முதலா வதாக வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கும் தென்பகுதி சிங் கள மக்களுக்கு தாமதமின்றி தண்ணீரைத்திறந்துவிடுவது மாத்திரமல்லாமல், குடி யேற்றம் என்ற பெயரில் அப்பாவி சிங்கள மக்களை வடக்குக்கு அழைத்துவந்து அவர்களை நடுத்தெருவிற்குக் கொண்டுவருவதையும் நிறுத்த வேண்டும்.

மகாவலி ஆறு ஓடும் தென்பகுதி சிங்கள மக்களுக்கே தண்ணீர்ப் பற்றாக்குறையும் அவர்க ளுக்கான பயிர்ச் செய் கைக்கான நீரும் வழங்க முடியாத நிலை இருந்தால், மகாவலி ஆறு எட்டியும் பார்க்காத வடக்கு மாகாணத் திற்கு மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் காணிகளைச் சுவீகரிப்பதென்பது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவேண்டும் என்ற அரசாங்கத்தின் உண்மையான நிகழ்ச்சி நிரலே அன்றி வேறு என்ன வாக இருக்க முடியும்?

மணலாறு என்ற தமிழ்ப்பிரதேசம் வெலிஓயா என்ற பெயரில் சிங்கள மயமாக்கப்பட்டு மகாவலி 'எல்' வலயம் என்று உருவாக்கி முப்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் அந்த வலயத்திற்கு மகாவலி ஆற்றின் நீர் இன்னமும் எட்டியும் பார்க்கவில்லை. இப்பொழுது மகாவலி 'ஐ' வலயம், 'ஜெ' வலயம் என்ற பெயர்களில் புதிய வலயங்களை உருவாக் குவதில் மகாவலி அதிகாரசபை ஈடுபட்டு வருகின்றது. வன்னிப் பகுதியில் சிறிய குளங்களை நம்பி, குறைந் தளவான விவசாயிகள் தமது விவசாயத்தைச் செய்து வருகின்றனர். நீங்கள் மகாவலி நீரைக் கொண்டுவருகிறோம் என்ற பிழையான பெயரில் இப்பொழுது விவசாயம் செய்யும் மக்களையும் விரட்டி, சிங்கள மக்களையும் குடியேற்றி மொத்தத்தில் தற்பொழுதுள்ள விவசா யத்தையும் அழிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றீர்கள். தயவு செய்து இத்தகைய தொலைநோக்கற்ற சகல நடவடிக்கைகளையும் நிறுத்துங்கள்.

மின்சாரம் இல்லா விட்டால் மனிதனால் உயிர் வாழ முடியும். ஆனால் வயிற்றுக்கு உணவில் லையேல் மக்கள் செத்து மடிவதைத்தவிர வேறுவ ழியில்லை. உணவில்லாமல் மருந்தில்லாமல் ஆயிரக்க ணக்கான மக்கள் எம் கண்முன்னே செத்து மடிந் ததைப் பார்த்த அனுபவம் எங்களுக்கு இருக்கிறது. அந்தத் துன்பம் சிங்கள மக்களுக்குஏற்படவேண்டாம்.

அடுத்த ஜனாதிபதியும் நான்தான் என்று கூக்குரல் இடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இந்த விடயங்களை தயவுசெய்து தங்களது கவனத்தில் எடுத் துக்கொள்ளுங்கள் - என்றுள்ளது

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# எம்பிலிபிட்டி விவசாயத்துக்கு நீர் வழங்காவிட்டால் 16.81 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படும் என்கிறார் சஜித்

எம்பிலிப்பிட்டிய பகுதியில் 65 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெற்செய்கைக்கு நீர்பாசனம் வழங்குவதற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாகவிரைவில் 16.81 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதால், விரைவில் நீரை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

கதிர் விட்டுவரும் நெற்செய்கை வயல்களுக்கு தண்ணீர் வழங்கக் கோரி எம்பிலிப்பிட்டி விவசாயிகள் ஆரம்பித்த சத்தியாகிரகப் போராட்டம் இன்னும் தொடர்கிறது என்றாலும், மோசடியான அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு அது பற்றி எந்தவித அக்கறையும் இல்லை.

சுமார் 75 ஆயிரம் ஏக்கர் பயிரிடப்பட்ட காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்க அரசாங்கம் தவறிவிட்டுள்ளது. அதில் 65 ஆயிரம் ஏக்கரில் மட்டும் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவும் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் வாரத்தில் நெற் செய்கையில் 16.81 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

குளிரூட்டி அறைகளில் இருந்து அரசாங்கம் எடுக்கும் தன்னிச்சையான முடிவுகளால் பாரிய அனர்த்தம் ஏற்படுவதை தடுக்க முடியாதுபோகும் என்பதோடு, உரத்தடைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தன்னிச்சையான முடிவுகளை அரசாங்கம் நினைவுகூர வேண்டுமெனநினைவூட்டுகின்றோம்.

நாடு மிக மோசமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், நாடுமுழுவதும்சோறுபோடும் விவசாயிகளின் வாழ்வோடு விளையாடுவதால் ஏற்படும் விளைவுகளை அரசாங்கம் மட்டுமல்லாது நாடு முழுவதும் அனுபவிக்க நேரிடும் எனவும், நாட்டின் விவசாயத்தை முடக்குவதற்கு எடுக்கும் அரசாங்கத்தின் நுட்பமான மற்றும் தந்திரமான முயற்சியா எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

விவசாயிகளை மேலும் ஏமாற்றாமல் அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையானதண்ணீரைஅரசாங்கம் திறந்துவிட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அரசாங்கம்எப்பொழுதும் மக்களுக்கு சார்பான செயற்பாடுகளையேயன்றி மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளையே செய்து வருகின்றது. அதன் விளைவுகள்அரசாங்கத்துக்கு பேரிடியாக விழும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (05)



## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு வழங்கலாம் ஶ்ரீலங்கா பொதுஜன உறுப்பினர் ஜகத் குமார கருத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு, சிறந்த முறையில் அரச நிர்வாகத்தை முன்னெடுப்பாராயின்ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கலாம் என ஶ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி தெரிவித்தார்.



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அஸ்வெசும நலன்புரி திட்டத்தில்காணப்படும்குறைபாடுகளை திருத்திக் கொள்ள நிதியமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

அஸ்வெசும திட்டத்தில் உள்ளடங்காத தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள மேன்முறையீடுகள், முறைப்பாடுகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும் வரை சமுர்த்தி பயனாளர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை தொடர்ந்து வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமை சிறந்ததாகும்.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.மக்களுக்கு எவ்வழியிலாவதுஅரசாங்கம் தீர்வு வழங்க வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கஅரசாங்கம்எடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு ஒத்துழைப்புவழங்குவோம்.

ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான எமது அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.பொருளாதாரப் பாதிப்புக்கு ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகள் அனைத்தும் பொறுப்புக் கூற வேண்டும். நெருக்கடியான சூழலில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார்.பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு சிறந்த முறையில் அரச நிர்வாகத்தை முன்னெடுப்பாராயின் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கலாம். - என்றார்.

## இலங்கை – இந்தியாவிற்கு இடையிலான தரைத் தொடர்பு ராமர் சேதுபாலத்துக்கு பதில் புதியபாதை குறித்து ஆராய்வு

இலங்கை ராமர் சேது பாலத்திற்கு பதில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் புதிய வேறு நிலத் தொடர்பை ஏற்படுத்துவது குறித்து ஆராயவுள்ளது.

இந்துமதஉணர்வுகளை தவிர்ப்பதற்காக இலங்கை இவ்வாறு சிந்தித்து வருகின்றது.

இலங்கைஜனாதிபதியின் சமீபத்தைய இந்திய விஜயத்தின்போதுஇலங்கைதுறைமுகங்களுடன் தொடர்பை அதிகரிப்பதற்காக தரைரீதியிலான தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டது.

நீண்டகாலத்துக்கு முன்னர் இதேயோசனை முன்வைக்கப்பட்டவேளை ராமர்சேது பாலம் அல்லது ஆதாமின் பாலத்தை உருவாக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

இராவணணின் பிடியிலிருந்த சீதையை காப்பாற்றுவதற்காக ராமர் இலங்கை நோக்கி பயணித்தவேளை உருவாக்கப்பட்டது இந்த பாலம் என்பது புராணம்.

இந்தியாவில் சேது சமுத்திர திட்டத்திற்கு சில தரப்பினர் சூழல் ஆர்வலர்கள் சில இந்துக்குழுக்கள் போன்றவை கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றன- இந்திய நீதிமன்றம் அதற்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான தரைத்தொடர்பைஏற்படுத்துவதற்காக புதிய பாதையொன்றை உருவாக்குவது குறித்து ஆராயப்படும் எனத் தெரிவித்துள்ள விடயமறிந்த வட்டாரங்கள் இராமர்சேது பாலத்தை விட இது நீளமாகக் காணப்படும் எனத் தெரிவித்துள்ளன. (05)

## தேசிய கீதம் தமிழில் இசைப்பது தவறாம்

### காமினி லொக்குகே கூறுகிறார்



தேசிய கீதத்தை திரிவுபடுத்தி பாடுவது தண்டனைக்குரியதவறாகும். தேசிய கீதத்தை தமிழ் மொழியில் இசைப்பதும் தவறு. புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் 13 ஆவது அரசமைப்பு தேவையற்றதாகும் என ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

கொழும்பில்இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அரசமைப்பின்13ஆவது திருத்தத்தைஅமுல்படுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை நாடாளுமன்றமே அதை தீர்மானிக்கவேண்டும்என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டில் தெளிவாகக் குறிப்பிட்டார்.

நாட்டில்தமிழர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களுக்கும் பிரச்சினை உள்ளது.ஒரு தரப்பினரது பிரச்சினைக்கு அரசமைப்பு ஊடாக மாத்திரம் எவ்வாறு தீர்வு காண்பது.அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு காணப்படும் பின்னணியில் அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை துரிதமாக அபிவிருத்தி செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி அப்பிரதேசமக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தினார். அந்த உரிமையைதமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் பாதுகாத்துக் கொள்ளவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதை காட்டிலும் புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். 69 லட்சம் மக்களின் கோரிக்கை புதிய அரசமைப்பை மையப்படுத்தியதாக உள்ளது. ஆகவே, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் 13 ஆவது திருத்தம் தேவையற்றதாக்கப்படும்.

தேசிய கீதத்தை ஒவ்வொருவரின் விருப்பத்துக்கு ஏற்ப திரிவுபடுத்தி பாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதும் தவறாகும்,நான் அதற்கு நேரடியாகவே எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளேன். - என்றார். (05)

## மன்னாரிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 150 கிலோ கடல் ஆமை உயிருடன் மீட்பு

### வாகன சாரதி கைது







மன்னாரில் இருந்து வாகனம் ஒன்றில் உயிருடன் மறைத்து கொண்டு செல்லப்பட்ட சுமார் 150 கிலோ கிராம் எடை கொண்ட அரிய வகை கடல் ஆமையை மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் செவ்வாய்க்கிழமை மாலை மீட்டுள்ளதுடன் வாகன சாரதியையும் கைது செய்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் ஆமை கடத்தப்படுவதாக பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சௌத்பார் பிரதான வீதி ரெலிக்கொம் சந்திபகுதியில்சந்தேகத்துக்குஇடமான வாகனம் ஒன்றை நிறுத்தி சோதனை செய்தபோது குறித்த வாகனத்தில் சூட்சுமமான முறையில் ஆமை மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

மீட்கப்பட்ட கடலாமை நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட உள்ள நிலையில் தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கடலாமையை வாகனத்தில்கொண்டுசென்றகுற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வாகன சாரதி மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## சுகாதாரத்துறை நெருக்கடிக்கு கெஹலிய பொறுப்பாளி அல்லர்

### காமினி லொக்குகே கூறுகிறார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் நிலைப்பாடு எமக்கில்லை. பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராகக் களமிறக்குவோம். பஸில் ராஜபக்ஷ ஜனா திபதி வேட்பாளராகக் களமிறக்கப்படலாம் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க் கிழமைஇடம்பெற்றநிகழ்வில் கலந்துகொண்டதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப் பிட்டவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு கட்சி என்ற ரீதியில் நாடாளுமன்றத்தின் ஊடாகவும் ஒத்துழைப்பு வழங்குகிறோம். சுகாதாரத்துறைஅமைச்சர்கெஹலிய ரம்புக்வெல்ல வுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை சிறந்த முறையில் வெற்றி கொள்வோம். சுகாதாரத்துறையில் தோற்றம் பெற்றுள்ள நெருக் கடிக்கு அமைச்சர் பொறுப்புக் கூற வேண்டிய தேவையில்லை.அவ்வாறான வழிமுறை ஏதும் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைக்க எவ்வித தீர்மானங்களும் இதுவரை எட்டப்படவில்லை. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்கும்நிலைப்பாடுஎமக்குக் கிடையாது. அரசியல் அனுபவமற்றவர்களே அவரைக் களமிறக்குவதாகக் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராகக்களமிறக்குவோம். முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படலாம். - என்றார். (05)

### கல்முனை ஆதார வைத்தியசாலை

## நோயாளர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம்!

வைத்தியசாலைநோயாளர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை ஆதார வைத்தியசாலையின் மனநோய் சிகிச்சைப்பிரிவு விடுதியில் இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில் மத்திய முகாம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஏ.சி.எம். ஆபீத் என்ற திருமணமான இளைஞனே உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்தவர் மன நோய் சிகிச்சைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலையின் மன நோய் சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சம்பவம் நடை பெற்ற இடத்துக்கு வருகை தந்த கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். இதன் பின்னர் மரணமடைந்தவரின்சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமானஎம்.எல்.றபீக் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விவசாயத்தை காப்பது அவசியம்

சப்பிரமுகமாகாணவிவசாயிகளின்கோரிக்கையை உதாசீனம் செய்ய ஆட்சியாளர்கள் எடுத்துள்ள தீர்மானம் ஏற்புடையதல்ல, கண்டிக்கத்தக்கது. உடனடியாக அவர்களின் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வு கண்டறியப்பட்டு வழங்கவேண்டியது ஆளும் தரப்பின் கடமை. மின் உற்பத்திக்கான மாற்று வாய்ப்பைக்கண்டறிவதற்குத்தற்போதையநிலையில் வாய்ப்புகள் உண்டு. ஆனால் விவசாயிகளின் தண்ணீர்த் தேவைக்கான மாற்று வழியைக் கண்டறிவதும் சாத்தியமற்றது என்கிற நிலையில் எதற்குமுக்கியத்துவம்வழங்குவது என்கிறதெரிவில் ஆளும் தரப்பு மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

சப்ரகமுவ மாகாணத்தில் சமநல வாவியின் கீழ் ஆயிரக்கணக்கான ஹெக்டெயர் நெல் வயல்கள் சிறுபோகத்தில் செய்கை பண்ணைப்படுகிறது. இந்த நெற்பயிருக்கானதண்ணீர்கிடைக்காதபட்சத்தில்பல ஆயிரக்கணக்கான ஹெக்டெயரில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் அழிந்து நாசமாகிவிடும். எனவே வாவியில் உள்ள நீரைத் திறந்து விவசாயத்தைக் காப்பாற்றுமாறு விவசாயிகள் கோருகின்றார்கள். கடந்த 10 நாட்களுக்கும் மேலாக அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடுகின்றார்.

தமது விவசாயம் அழிவின் விளிம்பில் இருப்பதாகவும் தமக்குத் தேவையான நீரை உடன் விடுவிக்கும்படியுமே அவர்கள் கோருகின்றார்கள்.

ஆனால், மின் உற்பத்தி பாதிக்காத வகையிலேயே இந்தப் பிரச்சினையைக் கையாளவேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்திருப்பதன் காரணமாக விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைப் பது அரிதாகிவிட்டது. இதனால் பயிரழிவு அனேகமாக உறுதியாகி இருக்கின்றது. நீர் மின் உற்ப்பத்திக்கான தண்ணீர் நீர்த் தேக்கங்களில் வெகுவேகமாக குறைந்து வருகின்றது என்று மின்சார சபை அறிவித்துள்ளது. அதேநேரம் நாட்டின் மின் தேவையின் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டதை அனல் மின் நிலையங்கள் ஊடாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையும் மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆக, நிதி வளங்களைத் திரட்டினால் அனல் மின் நிலையங்கள் ஊடான மின் உற்பத்தியை அதிகரிப்பதற்குவாய்ப்புகள்உண்டு. ஆனால், பயிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் தண்ணீரை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஆளும் தரப்பு புரிந்துகொள்ளவேண்டும்.

உடவலவ அணையிலிருந்து நீர் திறந்து விடப்படுமாயின், ஹம்பாந்தோட்டை, காலி உட்பட ஐந்துமாவட்டங்களுக்கானமின்சாரவிநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் என எரிசக்தி வலுசக்தி அமைச்சர் கூறியுள்ளார். ஆகவே நீரைத் திறந்துவிட முடியாது என மின்சார அமைச்சர் கூறுகின்ற அதேசமயம், விவசாயத்திற்கு நீர் கிடைக்காவிட்டால் 1700 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று விவசாய அமைச்சர் கூறுகிறார்.

இந்த விவசாயிகளின் சிறுபோக விவசாயத்திற்கு உரிய நீரை காலக் கிரமத்தில் வழங்குவதாக உத்தரவாதமளித்த மகாவலி அதிகாரசபை அதனை நிறைவேற்றத் தவறிவிட்டது. அது குறித்தும் விசாரணை நடத்தப்படவேண்டும். இந்த ஆண்டு எல்நினோ காலநிலை காரணமாக கடும் வறட்சி ஏற்படும் என்பது எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்ளாத அதிகார சபையின் நடவடிக்கைகள் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். அதேநேரம் இந்த விவசாயிகளின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு ஒன்றைக் கண்டு அவர்களின் பயிர்கள் காக்கப்படவேண்டியதும் அவசியம்.

# பெரமுனவை பிரிப்பதே ஜனாதிபதியின் திட்டம்

## மனோ கணேசன் எச்சரிக்கை

பொதுஜனபெரமுனவை பிரிக்கும்வேலையில்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில்நேற்று காலை ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - 'ஒரு நேரத்தில் வெளியேவருவதற்கேபயந்த மொட்டுராஜபக்ஷஅணியினர் தற்போது பகிரங்கமாகவும் சுதந்திரமாகவும் நடமாடுகின்றனர்.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க என்பவரைப் பற்றிஅனைவருக்குமேநன்கு தெரியும். அவர்பிரித்தாழ்வதில் சிறந்தவர் என்பதும் தெரியும்.

தற்போது மொட்டுக் கட்சியில் ரணில் அணி தோன்றி இருக்கின்றது.

பொதுஜன பெரமுனவிற்குள் இருக்கின்ற இளம் உறுப்பினர்கள்பலர்ரணிலின் பக்கம்திரும்பியிருக்கின்றனர்.

விசேடமாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டவர்கள் தற்போது ரணிலை ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கின்றனர். அத்துடன் அவருடன் இணைவதற்கும் தயாராக இருக்கின்றனர்.

மறுபக்கம்நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தனது ஆதரவாளர்களுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றார். எனவே எதிர் வரும் காலங்களில் பல சம்பவங்களை எதிர் பார்க்கலாம். அவற்றைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# தேர் திருவிழாவில் தங்கநகை திருட்டு 4 பெண்கள் கைது; யாழில் சம்பவம்!

யாழ்ப்பாணம் - நீர்வேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது பெண் ஒருவரின் தாலிக்கொடியை கொள்ளையிட்ட சந்தேகத்தில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 4 பெண்களில் இந்தியப் பிரஜை ஒருவரும் உள்ளடங்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்த்திருவிழாவில் தண்ணீர் பந்தலில் பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது பெண் ஒருவரின் தாலிக்கொடி கொள்ளையிடப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிலாபத்தைச் சேர்ந்த 26 வயது பெண், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதான பெண், மாத்தறையைச் சேர்ந்த 28 வயதுப் பெண் மற்றும் 49 வயதான இந்தியப் பிரஜை ஆகியோர் மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## வீடுடைத்துத் தங்க நகை திருடிச்சென்றவர் கைது



யாழ்ப்பாணம்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சில தினங்களுக்கு முன் வீடொன்றை உடைத்து தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் நபரொருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். நகர்ப் பகுதியை அண்டிய பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினை உடைத்து, வீட்டில் இருந்த சுமார் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியானதங்கநகைகள் திருடப்பட்டிருந்தன.

இந்த நகை திருட்டு தொடர்பில்உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துவந்த நிலையில், இந்த திருட்டோடு சம்பந்தப்பட்டநபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளைபொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (05)



## மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் லண்டனில் இடம்பெற்ற விபத்தில் மரணம்!

மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் தனது 75 ஆவது வயதில் காலமானார். லண்டனில்இடம்பெற்ற விபத்தொன்றில் விமல் சொக்கநாதன் உயிரிழந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவர், தான் எழுதிய 'லண்டனிலிருந்து விமல்' என்ற நூலை அண்மையில் கொழும்புதமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டிருந்தார்.

அதன் பின்னர், உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதின் 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூலின் அறிமுக விழா கொழும்பில் நடைபெற்றபோது, அந் நிகழ்வினை விமல் சொக்கநாதன் தலைமைேயற்று நடத்தியதோடு, நூல் வெளியீட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# தலவாக்கலை வனப்பகுதியில் பெண்ணின் சடலம் ஒன்று மீட்பு

தலவாக்கலை கிறேட் வெஸ்டன் வனப்பகுதியி இருந்து பெண்ணொருவரின் சடலம் செவ்வாய்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தலவாக்கலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தலவாக்கலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று கிறேட்வெஸ்டன் மலை பகுதிக்கு சென்றனர். கிறேட்வெஸ்டன் மலை உச்சிக்கு ஏறிச் செல்லும் வழியில் வனப்பகுதியின் நடுப்பகுதியில் இருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட பெண் 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர் . குறித்த சடலம் இதுவரையில்அடையாளம்காணப்படாத நிலையில்பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் .

கிறேட்வெஸ்டன்மலைத்தொடருக்கு ஏறுவதற்காக வருடத்தில் அதிகமான உள்நாட்டு சுற்றுலா பயணிகள் அங்கு செல்கின்றமை குறிப் பிடத்தக்கது. (05)

# வாழைத்தோட்ட நபரை தாக்கிய 3 பொலிஸாரும் மது போதையில்!

மதுபோதையில் கலவரத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் நபர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் கொழும்பு வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்துக்குரிய மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தியதையடுத்து, சட்ட வைத்தியர் அவர்களை பரிசோதித்து அவர்கள் மதுபோதையில் இருந்தனர் என மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பித்தனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழைத்தோட்டம் விஹாரை ஒன்றுக்கு அருகில் வீதித் தடைக் கடமையில் ஈடுபட்டிருந்த வாழைத்தோட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்றே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்தே மூன்று பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Roty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# மேய்ச்சல் நிலம் வழங்ககோரி மாடுகளுடன் கிளி. பண்ணையாளர்கள் நேற்று போராட்டம்



கிளிநொச்சியில் மேச்சல் நிலத்தை வழங்குமாறு கோரி மாடுகளுடன் பண்ணையாளர்கள் நேற்று (புதன்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களேதங்களுக்குரியமேச்சல் நிலத்தை கோரி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக தங்களுக்குரிய மேச்சல் நிலம் தொடர்பில் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்த போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை எனவும் விதைப்பு மற்றும் வறட்சியான காலங்களில் தங்களது கால்நடைகளை வளர்ப்பதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளகால்நடைவளர்ப்பாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தி விரைவாக மேச்சல் நிலத்தை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். (05)

# தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை வெளியிட்டதால் நிலக்சன் படுகொலை

## நினைவேந்தலில் நிரோஷ் தெரிவிப்பு

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் அவர்களது அரசியல் அபிலாஷைகளையும்உண்மைகளையும் வெளியுலகிற்குக் கொண்டு சென்றதன் காரணமாகவே தமிழ் ஊடகவியலாளர்கள்பலர்படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலைகளுக்கு அரசு முழுப்பொறுப்புடையது. அதனால்எந்தப்படுகொலைகளுக்கும் நீதி வழங்கப்படவில்லை என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்ததார்.

சாளரம் பத்திரிகையின் ஆசிரியரும் முன்னாள் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவருமான சகாதேவன் நிலக்சனின் 16 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாண ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகாதேவன் நிலக்சன் படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏராளமான பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் வீதிகளில் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்கள்யாரும் ஆயுதப் போராட்டத்தில் தொடர்புபட்டவர்கள் அல்லர். ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் மனித உரிமை மீறல்களுக்காகவும்துணிந்துசெயற்பட்டவர்கள்.

இவ்வாறாகப் படுகொலைசெய்யப்பட்டவர்கள் முழுமையான அரச கட்டுப்பாட்டுப்பகுதியில்கடுமையான இராணுவ பிரசன்னமுள்ள பகுதிகளிலேயே படுகொலைசெய்யப்பட்டனர். இவ்வாறாக நடைபெற்ற படுகொலைகளின் உண்மையும் ஆராயப்படவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் இல்லை. அரசு பொறுப்புச் சொல்லவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களைக் கூட பரிகாரங்கள் ஏற்படுத்தாது சகித்துக்கொள்ளுங்கள் எனக் கூறி வேடிக்கையான நல்லிணக்கம் பற்றிக் கூறப்படுகின்றது.

இதில் ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற பணியாளர்கள், மனித உரிமைகளுக்காக செயற்பட்டவர்கள், மாணவர் சங்க செயற்பாட்டாளர்கள் என திறமையான இளைய தலைமுறையை நாம் இழந்துள்ளோம். இவர்கள் விடயத்தில்இன்றும்நீதிக்காக ஏங்குகின்றோம். நடைபெற்ற அநியாயங்களுக்கு பொறுப்புக்கூறல் இன்றி இரண்டு மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டன.

இந்தக் காலப்பகுதியில் நியாயத்துக்காகப் போராடும் தாய்மாரும் உறவினரும் சாட்சியங்களும் உடல் உள தாக்கங்கள் மற்றும் வயது முதுமை காரணமாகமரணித்துபோகின்றனர். இவ்வாறே மகனுக்கான நீதிக்காக ஏங்கியவாறே நிலக்சனின் தாயும் திடீர் என மரணித்தார். இவைகள் நடைபெற்ற படுகொலைகளை மறைப்பதற்கும் போர் மற்றம் போரின் பின்பான பாரதூரமான மனித உரிமை மீறல்களை மறைப்புச் செய்து அரசை வெள்ளையடிப்பதற்கான அணுகுமுறைகளே ஆகும். இவ்வாறு தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (05)

# அத்துருகிரியவில் பிரபல வர்த்தகரிடம் கப்பம்கோரி கொலை மிரட்டல்விடுப்பு

## முன்னாள் கடற்படை சிப்பாய் உட்பட இருவர் கைது

அத்துருகிரிய பகுதியில் பிரபல வர்த்தகர் ஒருவருக்கு அழைப்புவிடுத்து அவரது மனைவியையும் பிள்ளைகளையும் கொலை செய்யப்போவதாக மிரட்டி 80 லட்சம் ரூபா பணத்தை பெற முயன்ற முன்னாள் கடற்படை சிப்பாய் உட்பட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அத்துருகிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சாரத பெர்னாண்டோ குறித்த தொலைபேசி அழைப்பை ஆராய்ந்த போது சந்தேக நபர்களின் இருப்பிடத்தை பொலிஸார்கண்டறிந்துஅவர்களைக் கைது செய்தனர்.

அத்துருகிரியஒருவலமற்றும்முல்லேகமபிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடைய ஒருவரும், 40 வயதுடைய ஓய்வுபெற்ற கடற்படை வீரர் ஒருவருமே இவ்வாறு அத்துருகிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# மூதூரில் யானை தாக்குதலுக்குள்ளாகி மூன்று பிள்ளைகளின் தந்தை படுகாயம்

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கங்குவேலி - அகஸ்தியதாபனம்பகுதியில்செவ்வாய்கிழமை மாலை காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர்பட்டித்திடல்பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை சிவசம்பு (வயது 63) எனத் தெரிய வருகின்றது.

குறித்த நபர் சிகிச்சைக்காக மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த நபரின் கழுத்து எலும்பு மற்றும் இடுப்பு பகுதி பாதிக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

கங்குவேலி - படு காட்டுப் பகுதியில் மேற் கொண்டுவரும் வயலுக்கு இரவுநேர யானை காவலுக்காக சென்றிருந்தபோது மாலையளவில் யானை யின் தாக்குதலுக்கு உள் ளாகியுள்ளார் எனத் தெரி விக்கப்படுகின்றது. (05)

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் 5 எஸ் முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை

மனித மேம்பாட்டு அமைப்பு மற்றும் முஸ்லிம் வாலிபர் சங்கம் மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை இளைஞர்களுக்கான 5 எஸ் முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சி பட்டறை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும் மாவடிப்பள்ளி வை.எம்.எம்.ஏயின் தலைவருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாகசம்மாந்துறைஆதாரவைத்தியசாலையின் அத்தியட்சகர் டாக்டர் எம்.எச்.எம். அசாத், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய உபதலைவர் எம்.ஐ. உதுமாலெப்பை ஆகியோர்கலந்துகொண்டதோடுகௌரவ அதிதிகளாக வைத்தியசாலையின் திட்டமிடல் அதிகாரி டாக்டர் எ.ஆர். நியாஸ் அஹமட் , அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அப்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம். றியாஸ், தாதிய பரிபாலகர் டி. எல். அப்துல் ரசூல், தாதிய பரிபாலகி சாஜிதா எம்.ஜெமீல், தர முகாமைத்துவ பிரிவினுடைய தாதிய உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஸ்ஹர், சம்மாந்துறை வை.எம்.எம்.ஏ. கிளையின் தலைவர் எம். ஆர்.சம்சுதீன், அக்கரைப்பற்று வை.எம்.எம்.ஏயின் தலைவர் எ.எ.பைரூஸ், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் செயலாளர் எ.எல். கியாஸ்டீன் என பலர் கலந்து சிறப்பித்ததோடு சாய்ந்தமருது, சம்மாந்துறை, நாவிதன்வெளி, அட்டாளைச்சேனை போன்ற பிரதேசங்களின் இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டுவிரிவுரை மற்றும்செயற்பாட்டு ரீதியிலான பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர்.

இந்தப் பயிற்சி பட்டறையின் வளவாளராக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் தாதிய பரிபாலகி சாஜிதா எம்.ஜெமீலால் 5 எஸ் முகாமைத்துவம் சம்பந்தமான விரிவுரைகளும், செயற்பாட்டு ரீதியிலான பயிற்சிகளும் நடத்தப்பட்டதுடன் அன்று மாலை கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)




# சாய்ந்தமருதில் போதைக்கு எதிரான பேரணி : வீதிக்கிறங்கிய மாணவர்களும், அதிகாரிகளும்

கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனை ஆலோசனைக்கிணங்க கல்முனை வலயக்கல்வி அலுவலக சிபாரிசின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அல்- ஹிலால் வித்தியாலயத்தின் ஏற் பாட்டில் போதைப்பாவனைக்கு எதிரான வீதி ஊர்வலமும், போதைக்கு எதிரான பிரசாரமும், துண்டுப்பிரசுர விநியோகமும் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நேற்று (புதன்கிழமை) சாய்ந்தமருது பிரதான வீதியில் நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வாகனத்தில் போதைப்பவனைக்கு எதிரான பிரசாரங்களுடன் பாடசாலை முன்றிலில் ஆரம்பித்த இந்த பேரணி சாய்ந்தமருது பொதுச்சந்தை வரை சென்று மீண்டும் மாளிகா சந்திவரை தொடர்ந்து மீளவும் பாடசாலைவளாகத்தைவந்தடைந்தது. இந்த பேரணியின் போது போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களைகலந்துகொண்டஅதிதிகள் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கி வைத்தனர்.

இந்த பேரணியில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், உதவிக்கல்வி பணிப்பாளருமான எம்.என்.ஏ.மலீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹீர், கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலகஅதிகாரிகள்,சிவில்அமைப்புக்களின் பிரமுகர்கள், பாடசாலை முகாமைத்துவ குழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டதுடன் ாணவர்கள் சுலோகங்களை ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*

# ஓய்வுபெற்ற பிரதி அதிபருக்கு சேவை நலன் பாராட்டு விழா

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்தில் கடந்த 10 வருடகாலமாக பிரதி அதிபராக கடமையாற்றி 31 வருடகால சேவைக் காலத்தை பூர்த்தி செய்து கடந்த மாதம் ஓய்வு பெற்ற ஏ.எம். அப்துல் நிஸார் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை நலன்புரிக் குழுவால் ஒழுங்கு செய்து பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலீக் ஆகியோரும் விசேட அதிதிகளாக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஏ. சஹறூன், பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ், கணக்காளர் எம்.எம். றூான் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் விசேட மலர் வெளியீடும் நடைபெற்றதுடன் ஓய்வு பெற்ற ஆசிரியர் நிஸார் அவர்களால் பாடசாலை ஆரம்பக் கல்வி மாணவர்கள் பயனடையும் வண்ணம் மாணவர்களுக்காக அடிப்படை தமிழ் அறிவுகளை உள்ளடக்கிய 'அமுதமொழி' என்ற நூலும் சகல மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## தெஹிவளை விஜய குமாரதுங்க சிலை மீது கல் வீசி தாக்குதல்

தெஹிவளை பொதுச் சந்தை வளாகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பிரபல நடிகர் விஜய குமாரதுங்கவின் சிலை கல் வீசித் தாக்கிச் சேதப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் காரணமாக விஜய குமாரதுங்கவின் சிலையின் முகத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இதேவேளை, குமாரதுங்கவின் சிலைக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை என தெஹிவளை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் முறைப்பாடு எதுவும் கிடைக்காவிட்டாலும் இந்த சேதத்தை ஏற்படுத்தியவர் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (05)

## 5.5 பில்லியன் ரூபா செலவில் சிறை கைதிகளுக்கு உணவு

அண்மைக் காலமாக நாட்டிலுள்ள சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை 29 ஆயிரம் அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், மேலதிக ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். இது நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கையின் 2 மடங்காகும்.

இலங்கை சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளில் 60 வீதமானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் நெரிசலை குறைக்கும் நோக்கில் 20 வருடங்களுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளை புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் விடுதலை செய்வது தொடர்பில் ஆலோசித்து வருவதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி, கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறைக்கைதிகளின் உணவு தேவைக்காக மாத்திரம் வருடாந்தம் 5.5 பில்லியன் ரூபா செலவிடப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)




## வரக்காப்பொல விபத்தில் பெண் பலி; 10 பேர் காயம்

வரக்காப்பொல, துல்ஹிரிய பகுதியில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் கனரக வாகனமும் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## உழவு இயந்திரம் – மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் சாவு, இருவர் காயம்

உழவு இயந்திரம் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி தடம்புரண்டதில் இளைஞன் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளதுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

உழவு இயந்திரத்தைத் திருத்தப்பணிக்காக கொக்கிளாயிலிருந்து கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள திருத்தகத்திற்கு சென்று மீண்டும் கொக்குளாய் பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த போது கொக்குத்தொடுவாய் பாடசாலைக்கு முன்பாக வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதி உழவு இயந்திரம் தடம்புரண்டதில் இளைஞன் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளதுடன் இருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் கொழும்பை சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு மரணமானவராவார். 42 மற்றும் 27 வயதுடைய இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மூவரும் உழவு இயந்திரத்தில் பயணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பொலிஸ் அதிகாரியை மிரட்டிய பஸ் உரிமையாளர் கைதானார்

வெலிக்கடை பொலிஸ் பிரிவின் போக்குவரத்து பிரிவில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில், தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் கைது செய்யபட்டுள்ளார்.

நுகேகொடைக்கும், ஹெட்டியாவத்தைக்கும் சேவையில் ஈடுபடும் 176 ஆம் இலக்க தனியார் பஸ் ஒன்றின் உரிமையாளரே கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் சாரதிக்கு எதிராக அபராதம் விதிப்பதற்கு குறித்த பொலிஸ் அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கு, எதிர்ப்புத் தெரிவித்து, பொலிஸ் அதிகாரிக்கு பஸ் நடத்துநராகக் கடமையாற்றிய அதன் உரிமையாளரால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில், அது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன.

காணொளியின் அடிப்படையில், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)



## தமிழக அரசின் தொழில்நுட்பசார்பு உதவிகளை மாணவர்களுக்குப் பெறுவது தொடர்பில் பேச்சு

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் தொழில் பயிற்சி கல்வி பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசின் தொழில்நுட்ப சார்பு உதவிகளை பெறுவது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பேச்சு நடத்தியுள்ளார்.

தமிழக மாநில அரசின் தொழில்நுட்பவியல் துறை மற்றும் டிஜிற்றல் சேவைகள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, எதிர் வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள மலையகம் - 200 நிகழ்வு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மலையகத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு விசேடமாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் தொடர்பான கற்கைநெறிகளுக்கான உதவிகள் பெறுவது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது. (05)

## மல்வானையில் கிணற்றில் வீழ்ந்து மூன்று வயதான சிறுமி உயிரிழப்பு

மல்வானை – வல்கம பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலுள்ள கிணற்றில் தவறி விழுந்து 3 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

கே.பி. திமாஷி ஜனித்மா மதுங்க என்ற சிறுமியே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது சிறுமியின் தாய் வீட்டில் இருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## போலி ஆவணம் மூலம் இத்தாலி செல்ல முயன்ற சங்கானையைச் சேர்ந்த தம்பதியர் கைது

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இலங்கையைச் சேர்ந்த இளம் தம்பதியினர் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், சங்கானைப் பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியினரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இவர்களின் பயணப் பொதிகளை சோதனையிட்டபோது, பொய்யான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு கடவுச்சீட்டுகளும் போலி வீசாவும் இந்த இளைஞனிடம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த யுவதியை சோதனைக்கு உட்படுத்தியபோது அவரது உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இத்தாலி வீசா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட தம்பதியினர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுதிணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

## இந்திய வர்த்தக குழு வடக்கிற்கு வருகை

### 3 நாள் சுற்றுலா.

(ந.லோகதயாளன்.)

இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பிரதிநிதிகள் குழுவொன்று வட மாகாணத்திற்கு 3 நாள் பயணமாக வருகை தந்துள்ளனர். ஜூலை 30 முதல் ஆகஸ்ட் ஒன்றுவரை வடமாகாணத்தில் தங்கியிருந்த அவர்கள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து வர்த்தக முதலீடுகளின் சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸைச் சந்தித்து முதலீட்டுக்கான வாய்ப்புத் தொடர்பில் அவர்கள் கேட்டறிந்தனர். வழக்கமான மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளபாடங்கள், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் போன்ற துறைகளை மையமாகவைத்து முதலீடுகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராப்பட்டுள்ளது.

இந்த 3 நாள் பயணத்தின்போது, வடமாகாணத்தில் கூட்டு முயற்சிகள், முதலீடுகள் மற்றும் வர்த்தக இணைப்புகளை ஆராய்வதற்காக உள்ளூர் வர்த்தக சபைகள், வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோருடனும் வருகை தந்த பிரதிநிதிகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.



வடமாகாணத்திற்கான பயணத்தைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடுகள் மற்றும் வர்த்தக தொடர்புகளை மேம்படுத்துவதற்காக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் தூதுக்குழுவினர் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அனைத்து வடிவங்களிலும் தொடர்பை மேம்படுத்துவதற்கும், பகிரப்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமைக்காக இந்த இணைப்புகளைப் பயன்படுத்துவதற்கும் இந்தியா மற்றும் இலங்கைத் தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் சென்றதாக அமையும. என யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் குறிப்பிட்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2023இல் வெளியிடப்பெற்றது.